*முற்பகல் 11—00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.*

**திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலம்பட்டி மேல்நிலைப் பள்ளியை இரண்டாகப் பிரித்து மாணவிகளுக்கான உயர்நிலைப் பள்ளியைத் துவங்க போதிய கருத்துரு அரசுக்கு அனுப்பப்பட்டும், போதிய நிதியினை பெற்றோர்—ஆசிரியர் கழகத்தின் மூலமாக கருவூலத்தில் செலுத்தியும், இரண்டு ஆண்டுகளாக எதிர்பார்த்து இருக்கின்ற மகளிர் உயர்நிலைப் பள்ளியை அமைத்துத் தர, பொற்கால ஆட்சியினுடைய மாண்புமிகு முதல்வர், நாங்கள் போற்றி வணங்கும் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்கிக் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வேலம்பட்டியிலே, மாணவிகளின் நலன் கருதி, நல்ல முறையில் நடைபெற்று வருகின்ற மேல்நிலைப் பள்ளியை இரண்டாகப் பிரித்து மாணவிகளுக்கான உயர்நிலைப் பள்ளியைத் துவங்க ஆவன செய்யப்படும் என அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கும் என் தொகுதி மக்களின் சார்பாகவும் என் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்து அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 207, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

**207—**

### தார்ச் சாலை அமைத்தல்

***37314—திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:**

*மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆண்டிபட்டி தொகுதி, கடமலை—மயிலை ஊராட்சி ஒன்றியத்திலுள்ள பண்டாரஊத்து மலைக் கிராமத்திற்கு தார்ச் சாலை அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) ஆண்டிப்பட்டி தொகுதி, கடமலை—மயிலை ஒன்றியத்திற்குட்பட்ட பண்டாரஊத்து மலைக் கிராமம், சிங்கராஜபுரத்திலிருந்து சுமார் 5.00 கி.மீ. தூரத்தில் உள்ளது. மொத்தமுள்ள 5 கி.மீ சாலையில் 0.382 கி.மீ. மட்டுமே மயிலாடும்பாறை காப்புக்காட்டு வனப் பகுதியில் உள்ளது. இந்தச் சாலையானது காப்புக்காட்டின் அறிவிக்கையில் அங்கீகரிக்கப்பட்ட சாலையாக 10.00 மீ. அகலத்திற்கு வழியுரிமை வழங்கப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது. எனவே, மயிலாடும்பாறை காப்புக்காட்டில் அமைந்துள்ள வழியுரிமை அனுமதிக்கப்பட்ட இந்தச் சாலையை தார்ச் சாலையாக மேம்படுத்தும் பணிக்கு பயனீட்டாளர் துறையிடமிருந்து உரிய கருத்துரு கிடைக்கப்பெறும்பட்சத்தில் அது பரிசீலிக்கப்பட்டு, துறையின்மூலம் அனுமதி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்ற விவரத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.*

**திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மக்களால் நான், மக்களுக்காக நான்" என்ற தாரக மந்திரத்தோடு நல்ல பல திட்டங்களை ஆற்றிவருகின்ற, நல்ல அரசு அமைத்திருக்கின்ற, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பாதம் பணிந்து வணங்கி (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களுக்கு முதலில் நன்றியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். காரணம், ஆண்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதியில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் காலத்தில் கடமலை—மயிலை ஒன்றியம் பிரிக்கப்பட்டது. அவர் முதலமைச்சராக இருந்தபோது அந்த பண்டாரஊத்து கிராமத்திற்கு தார்ச் சாலை அமைக்கப்பட்டது உண்மை. அதன்பிறகு இன்றுவரை அங்கே தார்ச் சாலை அமைப்பதற்கு பல கோரிக்கைகள் வைத்தும் அதற்கு விடை கிடைக்கவில்லை. தற்போது தார்ச்சாலை அமைக்கலாம் என்ற ஒரு தீர்ப்பை வனத் துறை மூலமாக மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கொடுத்ததற்கு நன்றியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். அந்தத் தார்ச் சாலை எப்போது*

[2014 ஜூலை 21

அமைத்துத் தரப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டிப்பட்டி தொகுதி, கடமலை—மயிலை ஒன்றியத்திற்குட்பட்ட பண்டாரஊத்து கிராமம், கண்டமனூர் சரகம், மயிலாடும்பாறை பிரிவு, குமணன் தொழு வடக்கு பீட் பகுதிக்குட்பட்டதாகும். சிங்கராஜபுரம் கிராமத்திலிருந்து சுமார் 5.00 கி.மீ. தூரத்தில் பண்டாரஊத்து கிராமம் உள்ளது. அங்கு 60 முதல் 70 வரையிலான வீடுகள் உள்ளன. இதில் சுமார் 250 பேர் வசித்து வருகின்றனர். மேற்படி சாலையில் காப்புக்காட்டிற்கு வெளியில் உள்ள 1.75 கி.மீ. நீளமுள்ள சாலை தார்ச் சாலையாக ஏற்கெனவே மேம்படுத்தப்பட்டுள்ளது. பண்டாரஊத்து மலைக்கிராமத்தில் உள்ள 0.50 கி.மீ. நீளம் உள்ள சாலை கான்கிரீட் சாலையாக அமைக்கப்பட்டுள்ளது. காப்புக்காட்டிற்கு வெளியில் உள்ள 2.368 கி.மீ. சாலை மேம்படுத்தப்படாமல் உள்ளது. இதனை மேம்படுத்த தொடர்புடைய துறைதான் மேல்நடவடிக்கை எடுக்க வேண்டும். காப்புக்காட்டில் மீதமுள்ள 0.382 கி.மீ. சாலையை வழியுரிமை அனுமதிக்கப்பட்ட 10 மீட்டர் அகலத்திற்கு மேம்படுத்த வனத் துறையின் முன் அனுமதி பெற்று பயனீட்டாளர் துறையின் மூலமாக மேம்பாடு செய்துகொள்ளலாம் என்கின்ற விவரத்தினை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.*

**திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது ஆண்டிபட்டி சட்டமன்றத் தொகுதிக்கு பல்வேறு நலத் திட்டங்களைக் கொடுத்தார்கள்.*

*முற்பகல் 11—05*

*அதில் ஒரு திட்டம்தான் மயிலாடும்பாறை—மல்லப்புரம் சாலை. அந்த வனப் பகுதியில் போக்குவரத்திற்கு அனுமதியைத் தந்தார்கள்.*

அந்தச் சாலையை இப்பொழுது அகலப்படுத்த வேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தச் சாலையையும் அகலப்படுத்த வேண்டுமெனக் கேட்டு, பண்டாரஊத்து கிராமத்திற்கு சாலை அமைப்பதற்கு அனுமதி தந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுக்கு மீண்டும் நன்றியைக் கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய அந்தச் சாலையை அகலப்படுத்துவதற்கு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 208, மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**208—**

**மாணவர் விடுதி**

***25052—திரு. ந. நஞ்சப்பன்:**

*மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், ஏரியூர், நெருப்பூர், செல்லமுடி, பெரும்பாலை ஆகிய பகுதிகளிலுள்ள மேல்நிலைப் பள்ளிகளில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*